**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | **திருமதி. வசந்தா** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.11.2023**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை ஆனையூர் அகதிகள் முகாமில் குடியிருந்து வருகிறேன். தையல் வேலை செய்கிறேன். எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் வசித்து வரும் தெய்வேந்திரன் என்பவர் அவரது மூத்தமகள் பிரேமலதா என்பவரை திருவண்ணாமலையில் திருமணம் செய்து கொடுத்துள்ளார். இரண்டாவது மகள் சாருலதா என்பவர் வீட்டில் இருந்த போது, தெய்வேந்திரன் என்னிடம் சாருலதாவிற்கு மாப்பிள்ளை இருந்தா சொல்லுங்க என்று சொன்னார். அதனால் எனக்குத் தெரிந்த ராஜேஸ்வரி என்பவர் சேலத்தில் பவளத்தானூரில் அகதிகள் முகாமில் வசித்து வருகிறார். நானும் வரும் இலங்கையில் ஒரே ஊரில் தான் வசித்தோம். அப்போது அவர், பவளத்தானூரில் மகாலிங்கம் என்பவர் மகன் கஜேந்திரன் என்பவர் இருப்பதாகவும் அவரைப் பேசி செய்யலாம் என்று சொன்னார். அவருடன் தெய்வேந்திரன் மகள் சாருலதாவிற்கு 31.08.2014 ம் தேதி திருமணம் நடந்தது. திருமணத்தின்

போது 8 பவுன் நகையும், பணம் ரூ.50,000/- ரொக்கமும், சீர் வரிசையும் பெண்வீட்டார் கொடுத்தார்கள். திருமணத்திற்குப் பிறகு கஜேந்திரனும் சாருலதாவும் பவளத்தானூரில் மாமியாருடன் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து. குழந்தைக்கு 11 மாதம் இருந்த போது பவளத்தானூரில் இருந்து, மதுரைக்கு சாருலதா வந்திருந்தார். 1 வது எதிரியும்., அவரது தாயாரும் 1 லட்சம் பணமும், பீரோவும், fridge யும் வாங்கிவரச் சொல்லி சாருலதாவிடம் சொல்லியுள்ளார்கள். மேற்படி பணமும், பொருட்களையும் சாருலதாவின் பெற்றோரால் கொடுக்க முடியவில்லை. அந்த காரணத்தால் சாருலதாவிற்கு பிறந்த குழந்தை தனக்குப் பிறக்கவில்லை என்று கஜேந்திரன் சாருலதாவிடம் சொன்னதாக சாருலதா என்னிடம் சொன்னார். அதனால் சாருலதா மிகவும் வருத்தத்துடன் பவளத்தானூரில் எதிரிகள் வீட்டில் வைத்து தூக்குப்போட்டுக்கொண்டார். அக்கம் பக்கம் இருந்தவர்கள் சாருலதாவைக் காப்பாற்றி வைத்திருந்தார்கள். அதன் பிறகு சாருலதா அவரது குழந்தையுடன் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார். திரும்பவும் சாருலதாவையும் அவரது குழந்தையும் கூட்டிக் கொண்டு சாருலதாவின் பெற்றோர் எதிரிகள் வீட்டிற்கு சென்றபோது, நாங்கள் கேட்ட பொருட்களையும் பணத்தையும் கொடுத்தால் தான் உன் மகள் இங்கே இருக்க முடியும் என்றும் இல்லாவிட்டால் உன் மகளின் பிணம் தான் வீட்டிற்கு வரும் என்று எதிரிகள் சொன்னார்கள். அதன் பிறகு சாருலதாவை அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்கள். மீண்டும் சாருலதாவின் பெற்றோர் எதிரிகள் வீட்டிற்கு அவரை அழைத்துச் சென்றபோது எதிரிகள் சாருலதாவை வீட்டிற்குள் விடாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். சாருலதாவிற்கு கஜேந்திரன் போன் செய்து, சாருலதாவிற்கு நடத்தை சரியில்லை என்றும் போனில் யாருடனோ பேசிக்கொண்டு இருக்கிற என்று கேவலமாக திட்டியுள்ளார். அதனால் நாங்கள் சாருலதாவிற்கு ஆறுதல் கூறினோம். 20 வயதிலேயே எனது வாழ்க்கை முடிந்துவிட்டது என்று சாருலதா எங்களிடம்

சொல்லி அழுதாள். நாங்கள் அவருக்கு ஆறுதல் கூறினோம். அதனால் மனம் உடைந்த சாருலதா இனிமேல் உயிரோடு இருக்கக்கூடாது என்று சொல்லி 21.05.2016 ம் தேதி தலைக்கு தேய்க்கும் சூப்பர் வாஸ்மால் 3 பாட்டில்களையும் குடித்துவிட்டார். அதைப் பார்த்த சாருலதாவின் அப்பா அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார். 02.06.2016 ம் தேதியன்று சாருலதா இறந்துவிட்டார். அதோடு தெய்வேந்திரன் கூடல்புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் சாருலதாவிற்கு மாப்பிள்ளை பார்த்துக் கொடுத்ததால் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

சாருலதாவின் தாயார் அசா1 சித்ரா எனது உடன் பிறந்த தங்கை என்றால் சரிதான். நாங்கள் எல்லாருமே இலங்கையில் இருந்து இந்தியா வந்து அரசு ஏற்பாடு செய்த அகதிகள் முகாமில் தங்கியுள்ளோம் என்றால் சரிதான். மதுரையில் உள்ள முகாமிற்கு ஒரு தாசில்தார், ஒரு VAO, ஒரு தலையாரி ஆகியோர்கள் பொறுப்பாக உள்ளார்கள் என்றால் சரிதான். சிலோனில் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு குடியேறினார்கள் என்று எனக்குத் தெரியும். அசா1,அசா2 குடியிருந்த வீடு 130 வீடுகள் தள்ளி எனது வீடு உள்ளது என்றால் சரியல்ல. அசா1 ன் வீடு 8 வது வட்டத்தில் உள்ளது. நான் இருந்தது 7 வது வட்டத்தில் ஆகும். அசா1 ன் வீட்டிற்கு அருகாமையில் பல வீடுகள் உள்ளது என்றால் சரிதான். முகாமில் நடக்கும் எல்லா விஷயங்களும் அங்குள்ள அரசு அதிகாரிகளிடம் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். சேலம் பவளத்தானூரில் வசிக்கும் ராஜேஷ் என்ற ராஜேஷ்வரி என்பவர் சிலோனில் எனக்கு பக்கத்து வீடு என்றால் சரியல்ல. எனக்கு பழக்கமானவர். ராஜேஷ்வரியுடன் எனக்கு எப்போதும் பேச்சுவார்த்தையுண்டு. அவரது செல்போன் எண் எனக்குத் தெரியும். பவளத்தானூருக்கு செல்வதற்கு முன்பாக, ராஜேஷ் என்ற ராஜேஷ்வரியிடம் பேசி தெரிந்து கொண்டபிறகு தான் அங்கு சென்றோம்.

இங்குள்ள முகாமில் இருக்கும் ஒரு பெண் திருமணமாகி வேறு ஒரு முகாமிற்குச் செல்லவேண்டும் என்றால் இங்குள்ள அதிகாரிகளிடம் சொல்லி அங்குள்ள முகாமில் கூடுதல் எண் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். 31.08.2014 ம்தேதி சேலத்தில் பவளத்தானூரில் வைத்து தான் திருணம் நடந்தது. சிலோனில் இருந்து வந்து குடியிருப்பவர்கள் வேறு வேறு ஜாதியாக இருந்தாலும் சிலோன்காரர்கள் என்ற அடையாளத்தின் அடிப்படையில் திருமணம் செய்து கொள்வார்கள் என்றால் சரிதான். ஆனால் ஒரு சிலர் அவர் அவர் ஜாதியிலேயே திருமணம் செய்வதும் உண்டு. இந்த வழக்கில் தெய்வேந்திரன் மகள் சாருலதாவிற்கு ஜாதி பார்த்து திருமணம் செய்யவிலலை என்றால் சரிதான். சாருலதாவிற்கு எந்த தேதியில் எந்த மருத்துவமனையில் எத்தனை மணிக்கு குழந்தை பிறந்தது என்று எங்கள் முகாமில் உள்ள அதிகாரியின் பதிவேட்டில் பதிவு செய்திருப்பார்கள். திருமணமாகி இந்த முகாமினை விட்டு வெளியே சென்றுவிட்டு மீண்டும் இந்த முகாமிற்கு வந்து சேர்ந்தாலும் எங்கள் முகாமில் உள்ள அதிகாரிகளிடம் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். ஆனால் சாருலதா எங்கள் முகாமிற்கு வந்ததை பதிவு செய்யவில்லை. சாருலதாவிற்கு குழந்தைபிறந்து எத்தனை மாதம் கழித்து சேலத்திற்குச் சென்றார் என்றும் எத்தனை மாதம் கழித்து திரும்பி மதுரைக்கு வந்தார் என்றும் எனக்குத் தெரியாது. சாருலதாவின் குழந்தை பேறுகாலத்திற்காக அவரை 7 மாத கர்ப்பமாக இருக்கும்போது தெய்வேந்திரன் அழைத்து வந்தார். சாருலதாவிற்கு எந்த தேதியில் குழந்தை பிறந்தது என்று எனக்குத் தெரியாது. சாருலதாவிற்கு திருமணம் நடத்துவதற்காக பவளத்தானூருக்குச் சென்றிருந்தபோது, எதிரியின் வீட்டில் அவரது பெரியப்பா, சித்தப்பா மற்றும் உறவினர்களும் நான் என் சகோதரி சித்ரா, ராஜேஷ் என்ற ராஜேஷ்வரியும் அவரது கணவரும் இருந்தார்கள். மற்றும் பெரியவர்களும் அங்கு இருந்தார்கள். சாருலதாவிற்கு திருமணம் முடிந்த பிறகு மதுரைக்கு நான் வந்தபிறகு மீண்டும் நான்

பவளத்தானுக்கு 3 முறை சென்றேன். ராஜேஷ் என்ற ராஜேஷ்வரியை நான் பார்ப்பேன். 3 முறை நான் பவளத்தானூருக்குச் சென்றபோது சாருலதா ன்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் அவர்கள் நன்றாகத்தான் இருந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக., சாருலதா இறப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு என்னை விசாரணை செய்தார்கள் என்றால் 21.05.2016 ம் தேதி சாருலதா மருந்துகுடித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்த போது என்னை போலிசார் விசாரணை செய்தார்கள். எத்தனை நாட்கள் சாருலதா சிகிச்சையில் இருந்தார் என்றும் எத்தனை நாட்கள் கழித்து என்னை போலிசார் விசாரணை செய்தார்கள் என்று தெரியவில்லை. போலிசார் விசாரணை செய்த போது நான் சொன்ன விபரங்களை போலிசார் எழுதிக்கொண்டார்கள். சாருலதா இறந்துபோன பிறகு எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரிணை செய்தார்கள் என்றால் என்னை விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக RDO விசாரணை செய்தார். RDO விடம் நான் தான் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்று வாக்குமூலம் கொடுக்கவில்லை. சாருலதா சூப்பர் வாஸ்மால் குடித்ததை நான் நேரடியாகப் பார்க்கவில்லை. அவரது அம்மா பார்த்துள்ளார். சாருலதாவுடன் 1 வது எதிரி போனில் பேசியதும் பிரிட்ஜ், பீரோ வாங்கிவா என்று எந்த தேதியில் சொன்னார் என்று எனக்குத் தெரியுமா என்றால் 1 வது எதிரி சாருலதாவிற்கு போன் செய்து பேசிய போது சாருலதாவுடன் நான் அருகில் தான் இருந்தேன். போலிசார் விசாரணையில் "1 வது எதிரி சாருலதாவிற்கு போன் செய்து பேசிய போது சாருலதாவுடன் நான் அருகில் தான் இருந்தேன்"என்று சொல்லவில்லை. நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் சாருலதாவிற்கு அவரது கணவர் வீட்டில் எந்த தொந்தரவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சாருலதாவிற்கு வளைகாப்பு நடக்கும்வரை சாருலதா சந்தோஷமாகத்தான் இருந்தார் என்றும் குழந்தை பிறந்த பிறகு சாருலதா சேலத்தில் பவளத்தானூருக்குச் செல்லவேயில்லை

என்றால் சரியல்ல. அதனால்தான் சாருலதாவிற்கு வேறு ஒரு தொடர்பு இருப்பதாக சந்தேகப்பட்டு 1 வது எதிரி பேசினார் என்றால் சரியல்ல. அதனால்தான் குழந்தையைக் கேட்டு எதிரிகள் வந்தார்கள் என்றால் சரியல்ல. 1 வது எதிரி குழந்தை தனக்குப் பிறக்கவில்லை என்று சொன்னால் குழந்தையை எப்படி கொடுப்போம். 1 வது எதிரி தனக்குப் பிறந்த குழந்தையை வேறு ஒருவருடன் தொடர்பில் இருக்கும் பெண்ணிடம் இருக்க வேண்டாம் என்று எதிரிகள் வந்து குழந்தையைக் கேட்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சாருலதா சூப்பர் வாஸ்மால் குடிக்கவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | **திருமதி. ராஜேஷ் என்ற ராஜேஸ்வரி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.11.2023**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் சேலம் மாவட்டம், பவளத்தானூர் அகதிகள் முகாமில் குடியிருந்து வருகிறேன். எங்களுக்கு பூர்வீகம் இலங்கை ஆகும். அசா5 ஐத் தெரியும். நான் இலங்கையில் இருந்த போது அசா5 உடன் பழக்கம். ஆஜர் எதிரிகளைத் தெரியும். ஆஜர் எதிரிகளும் சேலம், பவளத்தானூர் அகதிகள் முகாமில் எங்களுடன் தான் வசித்து வருகிறார்கள். அசா5 என்னிடம் மாப்பிள்ளை இருக்கிறார்களா என்று கேட்டார். நான் மாப்பிள்ளை இருக்கிறார் என்று சொன்னேன். அவர்கள் பேசி சம்பந்தம் செய்து கொண்டார்கள். திருமணத்திற்கு 6 பவுன் நகையும், 50,000 ரொக்கமும் கொடுத்தார்கள். மண்டபத்தில் திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பிறகு மாப்பிள்ளை வீட்டில் சேலத்தில் இருந்தார்கள். அவர்கள் குடும்பத்தில் என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்குத் தெரியாது. அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை

இருந்தது. சாருலதா இப்போது இல்லை. ஒரு நாள் 1 வது எதிரி வீட்டில் வைத்து சாருலதா தூக்குப்போட போனார். அதனால் 1 வது எதிரி, தனது மாமனார் தெய்வேந்திரனைக் கூப்பிட்டு, உங்க பொண்ணு தூக்குப் போட போகுது என்றும் நான் தங்கு வேலைக்குப் போவதால் எப்போதும் அவளைப் பார்த்துக்கொள்ள முடியாது என்றும் வந்து உங்க பொண்ணைக் கூப்பிட்டுப் போங்க என்றும் சொன்னார். அதன்பின்னர் சாருலதா அவரது அம்மா வீட்டிற்குப் போய்விட்டார். அங்கு சூப்பர் வாஸ்மால் குடித்து இறந்துவிட்டார். சாருலதா அவரது அம்மா வீட்டிற்கு வந்து 40, 45 நாட்கள் இருந்த போது அங்கு வைத்து தான் வாஸ்மால் குடித்துவிட்டார். திருமணம் முடித்து எத்தனை ஆண்டுகள் கழித்து இறந்தார் என்று தெரியாது. அப்போது சாருலதாவின் குழந்தைக்கு 8,9 மாதம் இருக்கும். வேறு விஷயங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்..

<u>**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**</u>

பவளத்தானூர் முகாமில் ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்றும் புதியதாக வந்த நபர் யார் என்றும் அங்குள்ள அதிகாரி பதிவு செய்வார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் மாதாமாதம் ரேஷன் பொருட்கள் வரும் என்றால் சரிதான். ஒருவர் புதியதாக திருமணமாகி வந்தாலும் மகப்பேறுக்காக வெளியூர் சென்றாலும் முகாமில் உள்ள அதிகாரியிடம் சொல்லி பதிவு செய்துவிட்டுத்தான் போகவேண்டும் என்றால் சரிதான். ஒரு பெண் தூக்குப் போட முயற்சி செய்தால் அங்கிருக்கும் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லி அவர்கள் என்ன ஏது என்று விசாரணை செய்வார்கள் என்றால் சரிதான். இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு இடமாற்றம் செய்த அகதிகளில் பொதுவாக மாப்பிள்ளை வீட்டார் தான் திருமண செலவுகள் செய்வார்கள் என்றும் மாப்பிள்ளை வீட்டில் தான் திருமணம் நடக்கும் என்றால் சரிதான். எனது வீடு 6,7 வீடுகள் தள்ளி 1 வது

எதிரியின் வீடு உள்ளது. திருமணத்திற்குப் பிறகு அவர்களது வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறதா என்று அசா5 என்னிடம் கேட்டது கிடையாது. புதியாதாக எங்கள் முகாமிற்கு ஒரு விருந்தினர் வந்தால் முகாமில் உள்ள அனைவருக்கும் அந்த விபரம் பற்றி தெரியும். திருமணத்திற்குப் பிறகு அசா5 எங்கள் முகாமிற்கு அடிக்கடி வந்திருந்தால் அது பற்றி எனக்குத் தெரிந்திருக்கும். குறிப்பாக ஆண்கள் வெளியூருக்கு வேலைக்குச் செல்வதாக இருந்தாலும் குறிப்பாக எந்த இடத்திற்கு வேலைக்குச் செல்கிறேன் என்று அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்துவிட்டுத்தான் செல்வார்கள் என்றால் சரிதான். அதுபோன்று அசா5 எங்கள் முகாமிற்கு வந்திருந்தால் எனக்கு அது பற்றி தெரிந்திருக்கும். திருமணத்திற்கு பிறகு 2 முறை அசா5 எங்கள் முகாமிற்கு வந்துள்ளார். அவ்வாறு 2 முறை அசா5 வந்தபோதும், எதிரிகள் குடும்பத்தைப் பற்றி அசா5 என்னிடம் தப்பாக எதுவும் சொல்லவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை